# மேரி தாமஸ்





சேவை செய்யத் துடிக்கும் இந்த இதயம் நிற்கப்போவது இல்லை - அது ஓடும் வேகத்தைப் பார்த்தால் என்றும் நிற்பதற்கான அறிகுறியும் இல்லை!!!!


1988-89வது வருடம், துடிப்பான பத்திரிகையாளரான திருமதி. சியாமளா நடராஜன் பெண்களுக்கு, முக்கியமாக பாலியல் தொழிலாளிகளுக்கு நடந்த அநீதியை எதிர்த்து போராடி, சட்டத்துக்கு விரோதமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த 1200 க்கும் மேற்பட்டவர்களை மறைந்த வழக்கறிஞர் திரு. கோவிந்தசாமியின் உதவியோடு விடுவித்தார். விடுவிக்கப்பட்டதில் ஒருவரும், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவருமாகிய செல்வி என்ற 21 வயது பெண் 92-93ல், திருமதி. சியாமளாவை தஞ்சம் அடைந்தார். அவரைப் போலவே, அவரின் தோழியாகிய மீராவும் (இப்போது ‘மேரிதாமஸ்’) ஒரு நாள் காவல்துறையினரால் வெகுவாக தாக்கப்பட்டு, பலத்த காயங்களோடு சியாமளா அவர்களின் உதவியை நாடி வந்தார். வெகுண்டு இருந்த மேரியை, திருமதி. சியாமளா சமாதானப்படுத்தி, கோபப்படுவதில் எந்த பிரயோஜனமில்லை என்றும், அவரைப் போல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

அச்சமயம் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட செல்வி அந்த கிருமியின் தாக்குதலால் படுத்த படுக்கையாகி, கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்துக் கொண்டிருந்தார். எவருமே தொட்டு சுத்தப்படுத்த தயங்கும் சிதைந்துப் போன பிறப்புறுப்புகளை மேரி கொஞ்சம் கூட யோசிக்காமல் செல்விக்கு செய்ததோடு, செல்வியை முழு மூச்சாக தன் கண்காணிப்புக்குள் கொண்டு வந்தார். எவ்வளவு செய்தும், நோயின் உச்சக்கட்டத்தில் இருந்த செல்வியை காப்பாற்ற முடியாமல் தன் கண் எதிரிலேயே செல்வி இறந்தது, மேரியை வெகுவாக பாதித்தது. அவரின் கோபம் குறைந்து, இரக்கம் வளர்ந்து, அன்பு பெருகி இன்று நாம் பார்க்கும் மேரி உருவாகினார்.

திருமதி. சியாமளா, இறந்து போன செல்வியின் பெயரிலேயே ‘செல்வி நினைவு அறக்கட்டளை’யை மேரியைத் துவங்க செய்து, அதன் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களிடையே எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்ச்சியைக் கொண்டு வரவும், சமூக களங்கத்தை ஒழிக்கவும், புணர்வாழ்வுக்கு வழிவகுக்கவும் என பல நிகழ்வுகளை செய்வதற்கு தேவையான அனைத்து உதவிகளைச் செய்தார். தன் நிறுவனமான ‘தென்னிந்திய எய்ட்ஸ் செயல் திட்டம்’ மூலமும், ‘பிரக்ருத்தி பவுண்டேஷன்’ நிறுவனரான தன் நண்பர் திரு. ரன்வீர்ஷா அவர்களின் மூலமும், செல்வி அறக்கட்டளைக்குத் தேவையான நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் செய்தார்.

2003-ல் தாம்பரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த 250 நோயாளிகளுக்கு கட்டுப்படியாகும் வகையில் அடிப்படை வசதிகள் கொண்ட, சுத்தமான, பாதுகாப்பான இடமும், மருத்துவமனைக்கு அருகாமையிலும், குடும்பத்தினரை சந்திக்க வசதியாகவும் இருக்குமாறு இடம் தேவைப்பட்டது. இதன் அடிப்படையில், 2004-ல் ‘செல்வி அறக்கட்டளை’, எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களும், அவர்களை கவனித்துக் கொள்பவர்களும் குறுகிய காலம் தங்குவதற்கான வசதியை அமைத்தது. மேரி தன் அறக்கட்டளையின் மூலம் ஆர்வத்துடன் செய்த சேவை, அவரின் வழிக்காட்டியான திருமதி. ஷ்யாமளாவுக்கு நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்ட 1000 பேரில் ஒருவராக இருக்க வழி வகுத்தது.

இந்த 30 வருடத்தில் மேரி எத்தனையோ தடைகளைக் கடந்து வந்தாலும் அவரின் சேவை முயற்சி இன்னும் வேகம் எடுத்துள்ளது நம்மை வியக்க வைக்கிறது. எய்ட்ஸ் விழிப்புணர்வு என ஆரம்பித்த அவரின் தொண்டு பயணம் இன்று பெண்களின் பலசுகாதார பிரச்னைகளோடு, உளவியல் பிரச்னைகளையும் தீர்க்கும் மையமாக விளங்குகிறது. மற்றவர்களின் துயரைப் போக்க தன்னிடம் இருக்கும் மிகச்சிறிய பண இருப்பைக்கூட, மேரி செலவு செய்ய தயங்குவதில்லை. தாம்பரம் மருத்துவமனையில் காசநோயால் அவதிப்படும் நோயாளிகள் கையில் காசு இல்லாததால் தம் குடும்பத்தினரிடம் பேச முடியாமல் இருப்பதைப் பார்த்து தன் கணக்கில் அவர்களைப்



பேச வைத்தது, அவரின் இளகிய மனதுக்கு எடுத்துக் காட்டாகும்.

அப்போதைய சுகாதார அமைச்சராக இருந்த திரு. உமாநந்தன், மேரியின் சேவைப் பணியைப் பார்த்து, பெண்களுக்கு-ஆண்களுக்கு என தனி காப்பகங்களை ஒதுக்கித் தந்தார். அவற்றையும் கவனித்துக் கொண்டு, அரசு சாரா நிறுவனங்கள், வெளிநாட்டிலிருந்து சில நல்ல உள்ளங்கள் மூலம் கிடைக்கும் நிதி, அவ்வப்போது கிடைக்கும் கூட்டு நிதியையும் வைத்து மேரி, தன்னுடைய சேவைப் பணியையும் விரிவுப் படுத்தினார்.

பாலியல் தொழிலளிகள், திருநங்கைகள், சரக்குந்து ஓட்டுனர், ஆட்டோ ஓட்டுனர் ஆகியோருக்கு எயிட்ஸ் மற்றும் காசநோய் பற்றிய புரிதல், அதை தவிர்ப்பதற்கான வழிமுறைகள், நோயால் பாதிக்கப்பட்டால் அதற்கான அறிகுறிகள் என்ன ...என்பதையெல்லாம் விளக்க நிறைய பயணம் செய்கிறார். ஆலோசனைக்காகவும், தங்களின்



புனர்வாழ்வுக்காகவும் தன்னிடம் வருபவர்களை நம்பகமான அரசு சாரா நிறுவனத்தில் கொண்டு சேர்ப்பதோடு, குணமாகிய நோயாளிகளின் சொந்த ஊருக்கு சென்று அவர்களை சேர்த்துக் கொள்ளும்படி அவரவர் குடும்பத்தினருக்கு விளக்கி புரியவைப்பதற்கும் மிகவும் மெனக்கெடுகிறார்

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஏழைக் குடும்பகளிலிருந்து வரும் பெண்களுக்கு, அவர்களின் பிறப்புறுப்புகள் பற்றியும், அவைகளைப் பராமரிக்கும் விதமும் சொல்லிக் கொடுக்கும் ஆலோசனை இயக்கங்கள் நடத்துகிறார். இதுமட்டுமின்றி, கற்பழிப்புக்கு பலியானவர்கள், மனநல நோயாளிகள், பலபாலியல் நோக்கு நிலைக்கு உட்பட்டவர்கள் ஆகியோருக்கு உதவுகிறார். ஆதரவற்ற பெண்கள்-ஆண்களுக்கு இருக்க இடமும், உண்ண உணவும், உடுக்க ஆடையும் கொடுத்து, அவர்களுக்கு அவ்வப் போது மருத்துவ முகாம் நடத்துகிறார். மேரி இந்த  51வது வயதில், பல தனியார் நிறுவனங்கள் மத்தியில், நம்பிக்கையின் ஒளிக்கதிராகவும், நங்கூரமாகவும் விளங்குகிறார். பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் போலீஸ், நோயாளிகளின் புணர்வாழ்வுக்காக உழைக்கும் 'பான்யன்' இயக்கம், மருத்துவமனைகள், இரத்த ஆய்வகங்கள், நீதிமன்றங்கள், அரசு அலுவலகங்கள், அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வு மையங்கள் ஆகியவற்றின் பொது





சேவை பெருகுவதற்கு, மேரி தாமஸ் பெரும் ஈர்ப்பு சக்தியாகவும், மையப் புள்ளியாகவும் உள்ளார்.

கடினமான நேரத்திலும், தன் விடாமுயற்சியை மேரி என்றும் கை விட்டதில்லை. காப்பகத்தில் இருப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு தலா 25/- தான் அரசு கொடுக்கும். ஆயினும், மூன்று வேளை சோறு, நொறுக்கு, பலகாரம், தங்கும் வசதி இவைகளில் மேரி எந்த குறையும் வைப்பதில்லை. தன் நோயாளிகளின் வியாதி தொற்று நோய் என்று நினைக்கும் அண்டை வீட்டாருக்கு அது தவறு என்று புரிய வைக்க போராடுகிறார்.

காஞ்சி புறநகர் பகுதியில் அவருக்கு பரிசாக கிடைக்கப் பெற்ற நிலம் அரசியல் புள்ளிகளாலும், மந்த அதிகாரிகளாலும் அபகரிக்கப்பட்டது. அண்டையர் கொடுத்த தொந்தரவால் தாம்பரம் வீட்டைக் காலி செய்ய வேண்டிய நிர்பந்தம் உண்டானது. கையிருப்பும் குறைந்தது. ஆனால் எந்த சூழ்நிலையும் அவரின் சேவை நோக்கத்தைக் குறைக்கவில்லை. மாறாக அவரின் லட்சியம் இன்னும் உறுதியானது.

தன் சுயசரிதையை ஒரு வணிகப் படமாக எடுத்து, அதில் தானே நடிக்க வேண்டும்; அதில் வரும் வருவாய் கொண்டு நிலம் வாங்கி, அதில் காப்பகம் கட்ட வேண்டும் என்பதே அவர் கனவு. இந்த படம் மூலமும், சில நல்ல உள்ளங்கள் மூலமும், தன் சேவையை விரிவுப்படுத்த வேண்டும் என்பது அவர் விருப்பம்.

மேரி தாமஸ் ஒரு கடும் போராளி, இரக்கம் மற்றும் தன்னலமற்ற சேவையின் மறுவடிவம், பின் தங்கியோர் மற்றும் ஆதரவற்றோரின் மீட்பர். இப்படிப்பட்ட ஒரு மின்னும் உதாரணச் சின்னமான மேரி தாமஸுக்கு சென்னை தலைவணங்கி அவரை சிறந்த வெற்றியாளராக கருதி பெருமை கொள்கிறது.